Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.164/2021

**Depositions of PW- 4**

| Name | திரு.மாயக்கண்ணன் | Occupation | எலக்ட்ரீசியன் |
|---|---|---|---|
| Father's name | மாயாண்டி | Calling | |
| Village | ரெங்கநாதபுரம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 0[1st] day of December 2025.

01.12.2025

2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெங்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது அப்பா, அசா.2 எனது தாத்தா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 12.09.2020 அன்று காலை சுமார் 07.00 மணியளவில் எங்களது காட்டில் நானும் எனது அப்பா மாயாண்டியும் எனது தாத்தா மாயாவும் புல் அறுத்துக்கொண்டிருந்தோம். எனது சித்தப்பா மாயாண்டியின் காட்டை ஆஜர் எதிரி அரியசாமி வாங்கியிருந்ததால் அவரது காட்டில் வேலி அடிப்பதற்காக தயார் செய்து கொண்டிருந்தார். எனது மற்றொரு சித்தப்பாவின் காடானது அரியசாமியின் காட்டிற்கு பின்புறம் உள்ளதால் வேலி அடிக்காதீர்கள் என்று கூறினோம். அப்போது எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது. அதன் பின் அங்கிருந்துஅனைவரும் சென்றுவிட்டனர் அன்று மாலை 05.00 மணியளவில் எங்கள் வீட்டருகே உள்ள இருளப்பசாமி கோவில் எதிரில் உள்ள டீக்கடையில் எனது சித்தப்பா கோவிந்தராஜ் டீ குடித்துக்கொண்டிருந்தார். அப்போது அரியசாமி, ஜெயபிரகாஷ், அருண்குமார் ஆகியோர் இருசக்கர வாகனத்தில்வந்து எனது சித்தப்பாவிடம் என் காட்டில

வேலைக்கு ஆள் வரக்கூடாதுன்னு சொல்ல நீ யாருடா என்றும் தேவிடியா மகனே சுன்னி மகனே என்றும் தகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர். மேற்படி எதிரிகள் எனது சித்தப்பா கோவிந்தராஜிடம் தகராறு செய்வதாக தகவல் தெரிந்து நானும், எனது அப்பா மற்றும் தாத்தா மாயா ஆகியோர் டீக்கடை வந்தபோது ஏன் தகராறு செய்கிறீர்கள் என்றும் பெரியவர்களை வைத்து பேசிக்கொள்ளலாம் என்றும் எதிரிகளிடம் கூறினோம். அவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது கைகழப்பு ஆகிவிட்டது. ஜெயபிரகாஷ் என்பவர்எனது அப்பா மாயாண்டியை தலையில் அடிக்க வந்தார். அவர் இடது கை வைத்து தடுத்ததில் எனது அப்பாவிற்கு இடது கை ஒடிந்துவிட்டது. 1ம் எதிரி அருண்குமார் என்பவர் எனது தாத்தாவை கட்டையை வைத்து இடது இடுப்பு விலா எலும்பில் அடித்துவிட்டார். உடனே எனது தாத்தா கீழே விழுந்துவிட்டார். அதன் பின்பு அவரால் எழுந்திருக்க முடியவில்லை. அதன் பின் அரியசாமி மீண்டும் எனது அப்பா மாயாண்டியை முதுகிலும் முகத்திலும் கட்டையை வைத்து அடித்தார். அருகிலிருந்தவர்கள் சத்தம்போட்டு விலக்கிவிட்டார்கள். அப்போது தற்செயலாக மம்சாபுரம் ரோட்டில் சென்றுகொண்டிருந்த காவலர் ஒருவர் வந்து சத்தம்போட்டு சென்றார். அதன் பின்பு எதிரிகள் அங்கிருந்து செல்லும்போது கட்டையை காண்பித்து இதற்கு மேல் எங்களிடம் பிரச்சனை செய்தால் கட்டையை வைத்து அடித்தே கொன்றுவிடுவோம் என்று கூறிவிட்டு சென்றார்கள். எனது அப்பாவையும் தாத்தாவையும் ஆட்டோவின் மூலம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு சிகிச்சையிலிருந்த எனது அப்பாவிடம் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள் நான் புகார்மனு எழுதிக்கொடுத்தேன் அதில் எனது அப்பா கையெழுத்து செய்து போலீசாரிடம் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கில் சாட்சியமளித்த அசா.1 எனது அப்பா, அசா.2 எனது தாத்தா ஆவார்கள். நான் திருவில்லிபுத்தூரில் யார் கூப்பிட்டாலும் அவர்களது இடத்திற்கு சென்று எலக்ட்ரீசியன் வேலை பார்த்து கொடுப்பேன். எங்களது இடமானது செண்பகத்தோப்பு ரோட்டில் உள்ள செட்டுரணியில் உள்ளது. தற்போது அந்த நிலத்தை விற்றுவிட்டோம். அரியசாமியும் அவரது இடத்தை தற்போது விற்றுவிட்டார் என்றால் சரிதான். அரியசாமி யாரிடம் நிலத்தை விற்றாரோ அவரிடம் தான் நாங்களும் நிலத்தை

விற்றோம் என்றால் சரிதான். அரியசாமி எனது சித்தப்பா காட்டை வாங்கியது முதலே எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்ததா என்றால் இல்லை. வேலி அமைப்பதற்காக ஆட்கள் வந்தபோது நானும் வயக்காட்டில் இருந்தேன். வேலி அமைப்பதற்காக இவ்வழக்கின் எதிரிகள் தான் குழி தோண்டிக்கொண்டிருந்தார்கள். அதன் பின்பு ஆட்கள் வருவதாக கூறினார்கள். ஆனால் ஆட்கள் வருவதற்கு முன்பே நாங்கள் வேலி அமைப்பதை நிறுத்திவிட்டோம். அவர்களது காட்டில் வேலி அமைக்கப்போவது எங்களுக்கு எப்படி தெரியும் என்றால் அவர்கள்தான் அவ்வாறு கூறினார்கள்.

நான் அந்த சமயத்தில் மாட்டிற்கு புல் அறுப்பதற்காக சென்றிருந்தேன். என்னுடன் தான் எனது அப்பாவும் தாத்தாவும் காட்டில் இருந்தார்கள் நாங்கள் மூவரும் ஒரே நேரத்தில் தான் காட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் காலை 06.00 மணியளவில் காட்டிற்கு சென்றோம். அதன் பின்பு எதிரிகளும் கிளம்பிவிட்டார்கள் நாங்களும் அங்கிருந்து கிளம்பிவிட்டோம். அதன் பின்பு மாலையில் யார் எங்களிடம் வந்து சண்டை நடப்பதாக தகவல் தெரிவித்தார் என்பவரது பெயர் எனக்கு தெரியாது. அவர் யார் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அவர் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர் என்பது மட்டும் எனக்கு தெரியும். மேற்படி நபர் என்னிடம் வந்து தகவல் சொன்னாரா என்றால் எங்களது வீட்டிற்கு முன்பு உள்ள மாட்டு தொழுவத்தில் எனது அப்பாவும் அம்மாவும் வேலை செய்து கொண்டிருந்தார்கள் அவர்களிடம் வந்து அரியசாமிக்கும் எனது சித்தப்பாவிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக மேற்படி நபர் கூறினார். நான் வீட்டிற்குள் இருந்து அவர் கூறியதை கேட்டேன். நான் வெளியே வந்து யார் யாருக்கு எந்த இடத்தில் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது என்பது பற்றி எந்த விவரமும் கேட்டுக்கொள்ளவில்லை. நான் சம்பவயிடத்திற்கு சென்றேனா என்றால் முதலில் எனது அப்பாவும் தாத்தாவும் சென்றார்கள் அவர்களுக்கு பின் நானும் அங்கு சென்றேன். மேற்படி எனது அப்பாவும் தாத்தாவும் சென்று அரை மணிநேரம் கழித்து நான் அங்கு சென்றேன். நான் அங்கு சென்றபோது எதிரிகள் யாரும் அந்த இடத்தில் இல்லை. அங்கு என்ன நடந்தது என்பது பற்றி எனது அப்பா என்னிடம் கூறினார். நான் சென்றபோது போலீசாரும் அங்கில்லை. நான் எனது அப்பா மற்றும் தாத்தாவை பெருமாள் என்பவரது ஆட்டோவில் அழைத்து சென்றேன். எங்களுடன் எனது அம்மா வந்தார். நான் சண்டை நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு சென்றபோது 05.45 மணி இருக்கும். நாங்கள் மருத்துவமனைக்கு 06.50 மணிக்கு சென்றோம்.

நாங்கள் சென்றபோது மருத்துவமனையில் மருத்துவர் இருந்தார். சண்டை நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கு ஆட்டோவில் வந்தார் 5 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரிதான். மேற்படி சண்டை நடந்த இடத்திலிருந்து மருத்துவமனை செல்வதற்கு இடைப்பட்ட நேரத்தில் எங்கு சென்றோம் என்றால் எனது அப்பாவையும் தாத்தாவையும் வீட்டிற்கு அழைத்து சென்றோம். கைவைத்தியம் பார்ப்பதற்காக ஆட்களை போன் மூலம் அழைத்தோம் ஆனால் அவர்கள் வரமுடியாது என்று கூறிவிட்டார்கள். அதன் பின்பு பெருமாள் என்பவரின் ஆட்டோவில் மருத்துவமனைக்கு சென்றோம். நாங்கள் சென்றபோது போலீசார் மருத்துவமனையில் இருந்தார்களா என்றால் பொதுவாக மருத்துவமனையில் இருக்கும் காவலர் இருந்தார். அவர்தான் எங்களிடம் வந்து விவரங்களை விசாரித்தார் என்றால் சரிதான். அவரிடம் மேற்படி சங்கதிகளை கூறினேனா என்றால் அவரிடம் கூறினேன். போலீசாரிடம் எனது அப்பா சொல்ல சொல்ல நான் எழுதி கொடுத்தேன். எனது அப்பா கையெழுத்து செய்து கொடுத்தார். நான் அதில் கையெழுத்து செய்யவில்லை, வேறு எந்த நபர்களும் கையெழுத்து செய்யவில்லை. மருத்துவமனையில் முதலில் எனது அப்பாவை சேர்த்தோம் அதன்பின்பு எனது தாத்தாவை சேர்த்தோம். போலீசார் புகார் மனு பெற்ற பின்பு மீண்டும் என்னை அன்றைய தினமே விசாரித்தனர். காவல்நிலையத்திற்கு வரவழைத்து போலீசார் என்னை விசாரித்தனர். மேற்படி நான் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் மீது உள்ள கோபத்தால் அவர்கள் மீது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.164/2021

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.கோவிந்தராஜ்** | Occupation | வியாபாரம் |
| Father's name | **நிலப்பாரை** | Calling | |
| Village | **ரெங்கநாதபுரம்** | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of December 2025.

01.12.2025

2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெங்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 12.09.2020 அன்று மாலை 05.00 மணியளவில் அசா.1 எனது கடைக்கு வந்து டீ குடித்துவிட்டு வெளியே சென்றார் அப்போது 3 நபர்கள் கட்டையுடன் வந்து சுன்னி புழுத்தி என்று அவதூறான வார்த்தைகளால் பேசிக்கொண்டு கட்டையை வைத்து தலையில் அடிக்க வந்தார்கள். அவர் கையை வைத்து தடுத்ததால் இடது கை ஒடிந்துவிட்டது. நாங்கள் ஒதுக்கிவிட்டு மருத்துவமனைக்கு அழைதது செல்ல புறப்பட்டபோது மீண்டும் 3 நபர்கள் கட்டையை வைத்து அவரை தாக்கினார்கள். அதன் பின்பு அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

அசா.1 சம்பவத்தன்று எனது டீக்கடையில் டீ குடித்துவிட்டு வெளியே சென்றார். மேற்படி எதிரிகளுக்கும் அசா.1க்கும் வாக்குவாதம் ஏற்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது. அசா.1 எனது கடையிலிருந்து வெளியே செல்லும்போதே இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் அவரை அடித்துவிட்டனர் என்றால் சரிதான். அவரை அடித்த நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது, ஆஜர் எதிரியை மட்டும் தெரியும். மேற்படி இருசக்கர வாகனத்தை யார் ஓட்டிவந்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி காயம்பட்ட நபர்களை பெருமாள் ஆட்டோவில் அவர்களின் மகன் அழைத்து சென்றார். மேற்படி சம்பவம் நடந்தபோது சவாரிக்கு வந்த பெருமாளும் நானும் தான் சண்டையை விலக்கிவிட்டோம். ஆட்டோவில் மேற்படி நபர்களை ஏற்றிக்கொண்டு எங்கு சென்றார்கள் என்றால் மருத்துவமனைக்கு செல்வதாகத்தான் என்னிடம் கூறினார்கள். மேற்படி நான் கூறியவாறு எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளை எனக்கு தெரியாது என்றாலும் அசா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவம் நடந்த மறுநாள் என்னை வந்து விசாரித்தனர்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.